


**14. 10. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. தேசிய பாதுகாப்பு படையினரின் சிறப்பு பயிற்சிகளுக்காக 141 கோடி ரூபாய் மதிப்பில் நவீன மையம் உருவாக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

2. விதிமுறை அடிப்படையில் சர்வதேச சட்டங்களை நடைமுறைபடுத்த வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் வலியுறுத்தியுள்ளார்.

3. தமிழக சட்டப்பேரவை மறைந்த முன்னாள் உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் இன்று ஒத்திவைக்கப்பட்டது.

4. நடப்பு சம்பா பருவத்திற்கு தேவையான உரத்தை போதிய அளவில் இருப்பு வைக்க மாநில வேளாண் அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவுறுத்தியுள்ளார்.

5. டென்மார்க் ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் ஆயுஷ் ஷெட்டி இன்று களமிறங்குகிறார்.

**இனி விரிவான செய்திகள்**

**************

**அமித்ஷா**

தேசிய பாதுகாப்பு படையினர், தீவிரவாத நடவடிக்கைகளை துணிச்சலுடன் எதிர்கொள்ள கட்டமைக்கப்படும் சிறப்பு பயிற்சி மையம் அவர்களது திறனை மேலும் வலுப்படுத்தும் என்று உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு காவலர்களின் 41ஆவது நிறுவன நாளை ஒட்டி, ஹரியானா மாநிலம் மனேசரில், 141 கோடி ரூபாய் மதிப்பில் சிறப்பு செயலாக்க பயிற்சி மையத்திற்கு இன்று அடிக்கல் நாட்டி பேசிய அவர், தீவிரவாத

சவால்களை எதிர்கொள்ளும் வகையில், அதிரடி படையினர் சிறப்பு பயிற்சிகளை மேற்கொள்ள இது வழிகோலும் என்றார்.

நவீன தொழில்நுட்பங்களுடன் இந்த பயிற்சி மையம் கட்டமைக்கப்பட உள்ளதாக எடுத்துரைத்த அவர், 6 தேசிய பாதுகாப்பு படை மையங்கள் ஏற்கனவே மும்பை, சென்னை, கொல்கத்தா, உள்ளிட்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

**********

ராஜ்நாத்சிங்

காலாவதியான சர்வதேச சட்டங்களின் சீர்திருத்தங்களுக்கு, இந்தியா உயர் முன்னுரிமையுடன் செயலாற்றி வருவதாக பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஐ.நா. படைபிரிவு பங்களிப்பு நாடுகளின் 3 நாள் மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், சர்வதேச சட்டங்களை, சில நாடுகள் வெளிப்படையாக மீறுவதாக குற்றம் சாட்டினார்.

விதிமுறைகள் அடிப்படையில், சர்வதேச சட்டங்கள் நடைமுறைபடுத்த வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமைதியை நிலைநாட்டுவதற்கான வழிமுறைகள் குறித்து எடுத்துரைத்த அவர், படை பிரிவுகள், தளவாடங்கள், தொழில்நுட்பங்கள், திறன் வளர்ச்சிகளுடன் உறுப்பு நாடுகள், நிரந்தர அமைதிக்கு பங்காற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சுய சார்பு பாரத திட்டத்தின் கீழ், இந்தியா குறைந்த செலவில், உள்நாட்டு தொழில்நுட்பங்களை உருவாக்கி, அமைதிக்கான நடைமுறைகளை வலுப்படுத்தியிருப்பதாக எடுத்துரைத்தார்.

அமைதி நிலைநாட்டுதல் நடவடிக்கைகளில், பெண்களின் பங்களிப்பை சுட்டிக்காட்டிய அவர், இதற்கான நடவடிக்கைகள் மேலும் வலுவடைந்திருப்பதாக குறிப்பிட்டார்.

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பில் ஐ.நா.வின் செயலாக்கத்தில் இந்தியா உறுதியுடன் துணை நிற்பதாக கூறிய அவர், ஐ.நா செயல்திட்டங்களின் கீழ் 180 இந்திய படைவீரர்கள் தங்களது இன்னுயிரை ஈந்திருப்பதாக பெருமிதம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய ராணுவ தலைமை தளபதி ஜென்ரல் உபேந்திரா திவேதி, நவீன தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து துருப்புகள் துரிதமாகவும், படைப்பாற்றல் திறனுடனும் செயலாற்றுவதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

ஐ.நா அமைதி படையில் பங்களிப்பு உள்ள 32 நாடுகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.

**********

### பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி மங்கோலியா அதிபர் Khurelsukh Ukhnaa-உடன் புதுதில்லியில் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

இருநாடுகளுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.

இந்தியா மங்கோலியா நாடுகளுக்கிடையே 70 ஆண்டுகால நட்புறவை வெளிப்படுத்தும் வகையில் சிறப்பு தபால் தலையும் வெளியிடப்பட்டது.

முன்னதாக மங்கோலிய அதிபர் ராஜ்காட்டில் தேசபிதா மகாத்மா காந்தியடிகள் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார்.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்முவை இன்றுமாலை அவர் சந்தித்து பேச உள்ளார்.

**********

### அஷ்விணி வைஷ்ணவ்

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டிணத்தில் ஒரு ஜிகாவாட் திறன் கொண்ட செயற்கை நுண்ணறிவு மையம் இன்னும் ஐந்தாண்டுகளில் 15 பில்லியன் டாலர் செலவில் ஏற்படுத்தப்படும் என்று மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பாரத் செயற்கை நுண்ணறிவு சக்தி நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், கூகுள் முதலீட்டுடன் அமைக்கப்படும் இம்மையத்தின் மூலம் நம் நாட்டின் செயற்கை நுண்ணறிவு திறன் பல மடங்கு உயரும் என்று குறிப்பிட்டார்.

தகவல் தொழில்நுட்ப துறையினரின் திறன்களை மறுசீரமைத்து மேம்படுத்த கூகுள் நிறுவனம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று

கேட்டுக்கொண்ட அவர் செயற்கை நுண்ணறிவு மின்னணு தொழில்நுட்பத்தில் மிக பெரிய பங்காற்றுவதாக எடுத்துரைத்தார்.

**********

**கீர்த்திவர்தன் சிங்**

மேற்காசியாவில் பேச்சுவார்த்தைகள், தூதரக நடவடிக்கைகள் மூலம் அமைதியை நிலைநாட்ட இந்தியா விரும்புவதாக வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு.கீர்த்திவர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

எகிப்து நாட்டின் **ஷார்ம்-எல்-ஷேக்** நகரில் காசா அமைதி உச்சிமாநாட்டில் பங்கேற்ற அவர், காசா அமைதி உடன்படிக்கைக்கு இந்தியா ஆதரவு அளிப்பதாக குறிப்பிட்டார்.

இந்த அமைதி ஒப்பந்தம் எட்டுவதற்கு கத்தார் மற்றும் எகிப்து நாடுகள் ஆற்றிய அளப்பரிய பங்கை அவர் பாராட்டினார்.

இப்பிராந்தியத்தில் அமைதி நீடிப்பதற்கான அனைத்து முயற்சிகளுக்கும் இந்தியா ஆதரவு அளிக்கும் என்று வெளியுறவு அமைச்சகம் உறுதி அளித்துள்ளது.

எகிப்து அதிபர் **அப்-தல் ஃபட்டா அல்சிசி,** அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்த இந்த உச்சிமாநாட்டில் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

**********

**சட்டப்பேரவை**

தமிழக சட்டப்பேரவை மறைந்த முன்னாள் உறுப்பினர்களுக்கு இன்று அஞ்சலி செலுத்திய பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

சட்டப்பேரவை இன்று கூடியதும், பேரவை தலைவர் திரு.அப்பாவு மறைந்த முன்னாள் உறுப்பினர்கள் 8 பேரின் மறைவிற்கு இரங்கல் குறிப்புகளை வாசித்தார்.

கரூரில் கடந்த 27ஆம் தேதி கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 பேர்,

கேரள மாநில முன்னாள் முதலமைச்சர் அச்சுதானந்தன்,

ஜார்கண்ட் மாநில முன்னாள் முதலமைச்சர் சிபுசோரன்,

முதுபெரும் அரசியல் தலைவரும், நாகலாந்து மாநில ஆளுநருமான இல.கணேசன்,

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் சுதாகர் ரெட்டி,

தமிழக அரசின் முதன்மை செயலாளர் டாக்டர் பீலா வெங்கடேசன்,

தற்போதைய சட்டப்பேரவையின் வால்பாறை தொகுதி உறுப்பினர் அமுல் கந்தசாமி ஆகியோரின் மறைவிற்கு பேரவையில் இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதனை தொடர்ந்து உறுப்பினர்கள் 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதனையடுத்து பேரவை நாளை வரை ஒத்திவைக்கப்படுவதாக பேரவை தலைவர் அறிவித்தார்.

வரும் வெள்ளிக்கிழமை வரை இந்த கூட்டத்தொடர் நடைபெறுகிறது.

**********

**எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**

தமிழ்நாட்டில் அனைத்து கூட்டுறவு தனியார் விற்பனை நிலையங்களில் நடப்பு சம்பா பருவத்திற்கு தேவையான உரத்தை போதிய அளவு இருப்பு வைக்க வேண்டும் என்று மாநில வேளாண் அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில் கூட்டுறவு, வேளாண் துறை, உர உற்பத்தி நிறுவன அலுவலர்களுடன் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில், இதனை முறையாக கண்காணிப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

ரயில் முனையங்களுக்கு வரும் உரங்களை கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கு நகர்வு செய்திட பிரதிநிதிகளை நியமித்து கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

விவசாயிகள் பயிர்சாகுபடியில் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை கண்டறிந்து களைய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

விவசாயிகள் ரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைத்து, பசுந்தாள், உயிரி, உயிர்ம உரங்களை பயன்படுத்த உரிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றார்.

பயிர் சார்ந்த உர மேலாண்மை, உள்ளிட்டவை குறித்து வேளாண் துறை அலுவலர்கள் ஊடகங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு தெரிவிக்கவும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

தமிழ்நாட்டில விதிமீறல்கள் கண்டறியப்பட்ட ஆயிரத்து 409 உர நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

**********

**அமைச்சர்கள் - இருவரி**

**வடகிழக்கு பருவமழையை ஒட்டி, நோய்** பரவலை தடுக்க, தமிழ்நாடு முழுவதும் 10 ஆயிரம் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

**ராணிப்பேட்டை மாவட்டம் முத்துக்கடையில்** 2 கோடியே 79 லட்ச ரூபாய் மதிப்பில் 3 வழிதட தாழ்தள பேருந்து சேவைகளை மாநில கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு.காந்தி இன்று கொடியசைத்து துவக்கிவைத்தார்.

**********

**இருவரி**

**திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர்** அலுவலகத்தில் மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திருமதி சிவசௌந்தரவள்ளி இன்று துவக்கிவைத்தார்.

**தேனி மாவட்டத்தில் இணையதள குற்றங்கள்** விழிப்புணர்வு பேரணியில் ஏராளமான கல்லூரி மாணாக்கர் இன்று பங்கேற்றனர்.

**********

**காஞ்சிபுரம்**

காஞ்சிபுரம் ஏனாத்தூர் பகுதியில் தனியார் கலை அறிவியல் கல்லூரியில், நாட்டு நலப்பணித்திட்ட மாணாக்கருக்கான 3 நாள் பேரிடர் ஒத்திகை பயிற்சி முகாம் இன்று தொடங்கியது.

இம்முகாமில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 200 மாணாக்கருக்கு பேரிடர் கால பயிற்சி உள்ளிட்டவை வழங்கப்படுவதாக, இக்கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் திரு.கணபதி தெரிவிக்கிறார்.

- - **கணபதி வாய்ஸ்** - -

**********

**சிவகங்கை**

சிவகங்கை மாவட்டம் வேட்டங்குடிபட்டி பறவைகள் சரணாலயத்தில், கண்மாய் கரைகளில் 4 ஆயிரம் பனை விதைகளை ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி இன்று நடவு செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**********

**நெல்லை - கரடி:**

நெல்லை மாவட்டம் கல்லிடைக்குறிச்சி தெற்கு பாப்பாக்குளம் குடியிருப்பு பகுதியில் கரடி நடமாட்டத்தை கட்டுப்படுத்த பொதுமக்கள் வனத்துறையினரை கேட்டுக்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

- - - **வாய்ஸ்** - - -

- **********

**அணை**

மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் கனமழை காரணமாக தேனி மாவட்டம் சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 10 அடி உயர்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

இம்மாவட்டத்தின் சுருளி அருவியில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகளுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

**********

**மழை – ராணிப்பேட்டை**

ராணிப்பேட்டை மாவட்டத்தில் தொடர் கன மழை காரணமாக 144 ஏரிகள் நிரம்பியுள்ளன.

மேம்புலம் ஏரி நிரம்பி கலவை மாம்பாக்கம் சாலையில் தண்ணீர் வழிந்தோடுவதால் வாகன ஓட்டிகள் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

இதனிடையே பாலாற்றிலிருந்து 8 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தின் நீர்நிலைகளுக்கு பொதுமக்கள் செல்ல வேண்டாம் என ஆட்சித்தலைவர் திருமதி சந்திரகலா அறிவுறுத்தியுள்ளார்.

**********

**வானிலை**

வடகிழக்கு பருவமழை தமிழகம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நாளை மறுநாள் தொடங்க கூடும் என்றும் தென்மேற்கு பருவமழை இன்னும் இரு தினங்களில் விலகும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கோவை, நீலகிரி ஈரோடு தேனி தென்காசி திருநெல்வேலி கன்னியாகுமரி தூத்துக்குடி ராமநாதபுரம் சிவகங்கை புதுக்கோட்டை மயிலாடுதுறை கடலூர் விழுப்புரம் செங்கல்பட்டு காஞ்சிபுரம் மாவட்டங்களில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்று இம்மையம் கூறியுள்ளது.

**********

**பேட்மிண்டன்**

டென்மார்க் ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் இன்று இந்தியாவின் Ayush Shetty - ∴பிரான்சின் Toma Junior Popov-ஐ எதிர்கொள்கிறார்.

**********

**கிரிக்கெட்**

புதுதில்லியில் வெஸ்ட் இண்டிஸ்க்கு எதிரான 2-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று 2-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது.

**********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**